**<u>06.02.2025</u>** **<u>அசல் வழக்கு எண்.89/2013</u>**

**<u>வா.சா. 1</u>** **திரு.அப்துல் முனாப் த/பெ.சையத் ஜானி சாகிப்**

**<u>சாட்சிய சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>**

வா.த.சா.ஆ.1 கிரய ஆவணத்தின் முன்னிலைக்கு நான் கிரயதாரர்களில் ஒருவரான சோட்டிமாபி என்பவரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளேன் என்றால், மொத்தம் 13 பேர்களிடமிருந்து கிரயம் பெற்றுள்ளேன். அம்முனிபி வகையறாவிடமிருந்து கிரயம் பெற்றுள்ளேன். சோட்டிமாபி அவர்கள் தனக்காகவும் தனது மைனர் குழந்தைகள் ஐந்து பேர்களுக்காகவும் சேர்த்து தான் எனது தாயாருக்கு கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். என் அம்மா கிரயம் பெற்றபோது அந்த சங்கதி எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான். அந்த கிரய ஆவண பதிவின்போது நானும் பதிவு அலுவலகத்திற்கு சென்றிருந்தேன் என்றால் இல்லை. நான் செல்லவில்லை. மேற்படி சோட்டிமாபி அவர்கள் கிரயம் கொடுக்கும்போது அவரது மைனர் குழந்தைகளுக்காக சேர்த்து கிரயம் கொடுக்க நீதிமன்றத்தில் உத்தரவு ஏதேனும் பெற்று கிரயம் கொடுத்தாரா என்றால் இல்லை. அந்த இளவர் குழந்தைகள் தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் இல்லை. அவ்வாறு மேற்படி மைனர் குழந்தைகள் தனது அம்மா சோட்டிமாபி அவர்கள் கிரயம் கொடுத்தது செல்லாது என்று குறிப்பிட்டு அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும், நான் அந்த வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின் ஒரு பகுதியை ரியாசத் அலி வகையறாவிடமிருந்து 10.05.2012 அன்று நான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அந்த நபர் வேறு ஒரு நபரிடமிருந்து கிரயம் பெற்ற சொத்தை தான் நான் வாங்கினேன். அம்முனிபி சொத்திற்கும் மேற்படி சொத்திற்கும் சம்பந்தம் இல்லை. தாவா எ அட்டவனை சொத்தின் ஒரு பகுதி தான் மேற்படி ரியாசத் அலி வகையறாவிடமிருந்து கிரயம் பெற்ற சொத்து என்றால் சரிதான். 10.05.2012 அன்று நான் கிரயம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ள வா.த.சா.ஆ.5 சொத்து விவரத்தில், காலம்சென்ற அலிஜான் சாயுபு மனைவி சோட்டிமாபி மெத்தை வீட்டின் நேர் பின்புறம் உள்ள சொத்திற்கு தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் அது புறம்போக்கு இடமாகும். சோட்டிமாபி மெத்தை வீட்டின் நேர் பின்புறம் உள்ள இடம் புறம்போக்கு இடம் இல்லை என்றால் சரிதான். அது பட்டா இடம். சோட்டிமாபி மெத்தை வீட்டின் நேர் பின்புறம் உள்ள காலி இடத்தை நான் கிரயம் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் தான் கிரயம் பெற்றுள்ளேன். எந்த தேதியில் அவ்வாறு கிரயம் பெற்றேன் என்றால் 10.05.2012 அன்று கிரயம் பெற்றேன். அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல்

செய்துள்ளேன். நான் 10.05.2012 அன்று ரியாசத் அலி வகையறாவிடமிருந்து கிரயம் பெற்ற சொத்தின் ஆவணத்தை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், மேற்படி சோட்டிமாபி மெத்தை வீட்டின் பின்புறம் உள்ள காலி இடத்தை கிரயம் பெற்றதாக குறிப்பிட்டுள்ள ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால், 28.06.2012 அன்று ரியாசத் அலி வகையறாவிடமிருந்து தான் மேற்படி சொத்தையும் கிரயம் பெற்றேன். மேற்படி 28.06.2012 அன்று கிரயம் பெற்றதாக குறிப்பிடும் கிரய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றாலும், தாக்கல் செய்ததாக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றாலும் சரியல்ல. நான் 28.06.2012 அன்று ரியாசத் அலி வகையறாவிடமிருந்து 1072 சதுரடி நிலத்தை கிரயம் பெற்றேன் என்றால், சரிதான். அந்த கிரய ஆவணத்தின்படி சர்வே எண்.406/1-ல் மொத்தம் 4225 அடி என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் எனது தாயார் 2199 சதுரடி இடத்தை கிரயம் வாங்கியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான். 4225 சதுரடி நிலத்தில் எனது தாயார் கிரயம் பெற்ற 2199 சதுரடி போக மீதம் இருந்த 2026 சதுரடியில் நான் 1072 சதுரடி நிலத்தை கிரயம் பெற்றேன் என்றால், நான் மொத்தம் 3 அயிட்ட சொத்துக்களை கிரயம் பெற்றுள்ளேன். முதல் அயிட்ட சொத்து 332 சதுரடியாகும். இரண்டாவது அயிட்ட சொத்து 954 சதுரடியாகும். மேற்படி இரண்டு அயிட்ட சொத்துக்கள் குறித்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், அந்த ஆவணம் நான் வாங்கிய சொத்து இல்லை. சையத் உமர் என்பவர் வாங்கிய சொத்தாகும். நான் சையத் உமர் சொத்தை கிரயம் பெற்றதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும், நான் கிரயம் பெற்றது போக மீதம் அந்த இடத்தில் 954 சதுரடி இடம் தான் மீதம் உள்ளது என்றாலும் சரியல்ல. நான் ரியாசத் அலி வகையறாவிடமிருந்து 28.06.2012 அன்று கிரயம் பெற்ற பின்பு சர்வே எண்.406/1ல் உள்ள சொத்தை அதன் உரிமையாளரிடமிருந்து கிரயம் ஏதேனும் பெற்றேனா என்றால் இல்லை. வா.த.சா.ஆ.5 ஆவணத்தின் சொத்து விவரத்தில் சோட்டிமாபி மெத்தை வீட்டிற்கு பின்புறம் உள்ள காலி இடத்திற்கு தெற்கு என்று குறிப்பிட்டு நான் கிரயம் பெற்ற சொத்து அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த சொத்தின் வடக்கு புறம் உள்ள சொத்தை நான் கிரயம் பெறவில்லை என்றால் சரிதான். அது புறம்போக்கு இடம். நான் ஏற்கனவே அந்த சொத்தை சோட்டிமாபி வீடு கட்டியுள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில், தற்போது புறம்போக்கு இடம் என மாற்றி கூறுகிறேன் என்றாலும், எனவே நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான்

கிரயம் வாங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ள இரண்டு சொத்துக்களுக்கு பட்டா உள்ளதா என்றால் உள்ளது. என் பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வைத்துள்ளேன். தாக்கல் செய்யவேண்டுமென்றால் தாக்கல் செய்வதற்கு தயாராக உள்ளேன். வா.த.சா.ஆ.8 வரி ரசீதானது என்னால் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றாலும், அதில் எந்த சொத்து குறித்த வீட்டின் ரசீது அது என்று குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. எனது தாயார் எனக்கு தானம் கொடுத்ததாக குறிப்பிடும் சொத்தானது எப்போது எனக்கு கொடுக்கப்பட்டது என்றால், 11.04.2003 அன்று கொடுக்கப்பட்டது. எனது தாயார் தானமாக கொடுத்த சொத்தை தற்போது நான் என் பெயரில் பட்டா மாற்றம் செய்து அனுபவித்து வருகிறேனா என்றால் ஆமாம். வா.த.சா.ஆ.9 முதல் வா.த.சா.ஆ.12 வரையிலான வீட்டு வரி ரசீதுகள் எனது தாயார் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை நான் இந்த வழக்கிற்காக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.14 ஆவணமானது நான் பிரதிவாதிக்கு பட்டா கொடுக்கக்கூடாது என்று வட்டாட்சியருக்கு கொடுத்திருந்த மனு என்றால் சரிதான். அந்த மனுவில் அசல் வழக்கு எண்.109/2011 வழக்கு நிலுவையில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.109/2011ஆனது பிரதிவாதிகளுக்கு குடிநீர் இணைப்பு கொடுக்கக்கூடாது என்று கோரிக்கை வைத்து நான் தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான். அந்த வழக்கு தான் நான் முதன் முதலில் தாக்கல் செய்த வழக்கா என்றால் அந்த வழக்கை நான் தாக்கல் செய்தது போல் எனக்கு ஞாபகம் இல்லை. எந்த அடிப்படையில் அவ்வாறு வழக்கு நிலுவையில் உள்ளதாக நான் மேற்படி மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த வழக்கானது என்னால் தாக்கல் செய்யப்பட்டு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டதால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.

ஓம்/- K.பாக்யராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி (மு.கூ.பொ)